O.S.39-2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.39/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி மீனாட்சி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. மீனாட்சி | வயது | : | 24/24 |
| கணவர் பெயர் | : | ரமணா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | மேட்டுப்பட்டி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-05.11.2024

பி.வா.சா.1

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

**1) இந்த** வழக்கின் வாதி வள்ளிக்கண்ணு என்ன பரிகாரம் கேட்டு வழக்கு செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் என் அப்பாவிற்கு உரிமையான சொத்தில் அவருக்கு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2) வாதிகள் எனக்கு அத்தை உறவு முறை. எனது அப்பா தற்போது உயிருடன் இல்லை. எனது அப்பா இறக்கும்போது எனக்கு 18 வயது. இந்த வழக்கு எனது அப்பா இறந்த பின்னர் 2018ல் தாக்கல் செய்துள்ளார்கள்.

3) வழக்கு சொத்தினை கேட்டு எனது அப்பா இறந்த பிறகு எங்களிடம் பிரச்சினை செய்தார்கள். எனக்கு உடன் பிறந்தவர் ஒரு தம்பி மட்டும். அவர் என் அப்பா உயிருடன் இருந்த காலத்திலேயே விபத்தில் இறந்துவிட்டார்.

4) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் நான் சொல்லித்தான் தாக்கல் செய்யப்பட்டது. அதில் ஒரு சில விபரங்கள் நேரடியாக தெரியும். ஒரு சில விபரங்கள் என் அப்பா சொல்லி தெரிந்துகொண்டேன்.

5) நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் நானும், எனது அம்மாவும் தனியாகத்தான் இருந்தோம் என்றாலும், என் அப்பாவுடன் எங்களுக்கு

பேச்சு, வார்த்தை இல்லை என்றாலும் சரியல்ல. என் அப்பாவிற்கும், என் அம்மாவிற்கும் சண்டை வந்தாலும் நாங்கள் எங்கள் அப்பாவுடன்தான் இருந்தோம்.

6) வழக்கு சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் என் தாத்தா பெயரில் இருந்த சொத்து, பின்னர் என் அப்பாத்தா பெயரில் இருந்து எனது அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் பிரித்து சொத்து கொடுக்கப்பட்டது. தாவா சொத்து என் அப்பாவிற்கு கொடுக்கப்பட்ட சொத்து.

7) 1ம் வாதி வள்ளிக்கண்ணுவிற்கு எப்பொழுது திருமணம் நடந்தது என்றால் 25 வருடங்களுக்கு முன்பாக திருமணம் நடந்தது. வாதிகளுக்கு சீர் வரிசை கொடுத்ததாக மனுவில் சொல்லியிருக்கும் விபரம் எனக்கு என் அப்பா சொல்லி தெரியும்.

8) என் அப்பா உயிருடன் இருந்தகாலம் வரை நாங்கள் தனியாக இருந்து வந்தோம் என்றாலும், வழக்கிற்காக என் அப்பாவுடன் வசித்தோம் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

9) எனது முதல் விசாரணையில் 2004ம் வருடம் பாகம் பிரித்ததாக சொல்லியிருப்பதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது. 2004ம் வருடம் பாகம் பிரித்ததாக சொல்லும்போது எனக்கு 4 வயது இருக்கும்.

10) அவ்வாறு வாய்மொழியாக பாகம் ஏதும் பிரிக்கவில்லை என்றாலும், அவ்வாறு வாய்மொழி பாகம் பிரித்திருந்தால் ஒரு ஆவணம் ஏற்பட்டிருக்கும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

11) எனது முதல் விசாரணையின்3வது பாராவில் வாதிகள் பாகம் கோரவில்லை என்றும், 4வது பாராவில் வாதிகள் முன்னிலையில் அவர்கள் சம்மதத்துடன் தான் பாகம் பிரிக்கப்பட்டது என்றும் முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சொல்வதுபோல் பாகம் ஏதும் பிரிக்கவில்லை என்றால் சரியல்ல.

12) வாதிகள் என்னுடன் பேச்சு, வார்த்தையாக உள்ளார்களா என்றால் இல்லை.

13) பொதுவாக ஒரு பெண்ணின் திருமணம் மற்றும் திருமணத்திற்கு பின்னிட்டும், அவர்களது காலம் வரையில் சீர் வரிசைகள் செய்யும் வழக்கம் உண்டு என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அவர்கள் எனது தகப்பனாருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்தில் பாகம் கோருகிறார்கள்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.